முருகப்பெருமான் துணை

**மகான் சுந்தரமூர்த்தி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.02.2024**, சனிக்கிழமை

1. அருட்குருவே ஞான தேசிகா
ஆற்றல்மிக்க குருராசா
இருள் போக்கி உலகை மீட்க
ஏகாந்த சோதி வழிபாட்டை அருளும்
2. அருளும் ஆறுமுக அரங்கா
அகிலமதில் உன் பெருமை கூறி
வரமென சோபகிருது கலை திங்கள்
வல்லமைபட இருபானேழ் திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 27 ம் நாள், 10.02.2024, சனிக்கிழமை)
3. வாரமதில் துல்லிய ஆசி
வழங்குவேன் சுந்தரமூர்த்தி யானும்
சோரமிலா ஞானயுகம் படைக்க
சுப்பிரமண்யர் ஞானமருளுகின்ற
4. அருளுகின்ற அரங்க ஞானி
ஆற்றல் மிக்க வழிகாட்டல்
அருளும் அறமுமாக இருக்க
அகிலத்தார் வந்து அடிபணிய
5. அடிபணிய வாழ்வில் மாற்றம்
அரங்கமகான் ஆசிபலமாக
நாடியே தேடிய பலன்களெல்லாம்
நம்பகமுற இனிதே நடந்தேறும்
6. தேறவே ஞான பலமுடன்
தெய்வ பலம் தருமபலமடைய
சரவணச் சுடரை வணங்கி
சற்குரு அரங்கனிடம் தீட்சை பலம்
7. தீட்சைபலம் கண்டு விட
தேடிவரும் அனைவருக்கும் ஆற்றல்
தீட்சையாக மகா சக்தியாக
தேசிகனின் சர்வபலமுமாக அருளி

8. அருளியே அனைவருக்கும் ஞானம்
அழியாமை சக்தியாக மாறி
அருள்மிக்க ஞான உலகை
அனைவரும் இணைந்து படைக்கும்

9. படைக்கும் ஞானபலமாக
பாடிடுவேன் வருங்கால மாற்றம்
தடையற உலகினில் நடக்கும்
தவசி அரங்கன் வழி காட்டலில்

10. வழிகாட்டலில் உலகம் எங்கிலும்
வரம் பெற்ற ஞானப் படைகள்
அழிவிலா மகா சக்தியாக மாறி
ஆளுமைகளை ஞான வழி திருப்பி

11. திருப்பி ஞானத்தலைமை கண்டு
திடமுற ஞான ஆட்சியை
விருப்பமுற மக்கள் ஏற்றிட
வேலவன் சக்தியாக படைக்கும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–